சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :20.06.2025

வா.சா.1 – ரித்திஷ் S/o சோமன்

O.S No.204/2023 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

வழக்கானது கல்விக்கடன் தொடர்புடையது என்றால் சரிதான். பிரதிவாதிகள் கல்விக்கடனாக ரூபாய் 3,09,000 பெற்றதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனானது மாதம் ரூபாய் 4523 என்ற வீதம் 120 மாதங்கள் மாத தவணைகளில் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2017 வருடம் முதல் 30.09.2019 வரை நிலுவை தொகை இல்லாமல் கடனை முறையே செலுத்திவந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றும் 30.09.2019 வரை பிரதிவாதிகள் தவணை தொகையை தவறாமல் செலுத்திவந்துள்ளார் என்றும் நான் ஆவணங்களை சரிபார்க்காமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 2019 வரை சரியாக தவணை தொகை செலுத்தி வந்ததை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் இருக்கிறது என்றும், அதற்கு முன்பாக அவசரகதியில் வழக்கை தாக்கல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வேலை கிடைக்காமல் வீட்டோடு இருக்கிறார் என்றும் அவர் வேலை கிடைத்தவுடன் தொகையை செலுத்த தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.06.20 18:15:06 +0530

Sub Judge

Melur